மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் நம் சட்டமன்றத்தின் விதி முறை. இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கன்னிப் பேச்சில், முதல் பேச்சில், இன்று படிக்கலாம். அடுத்த தடவை முதற்கொண்டு முழுவதும் படிக்காமல் விவரங்களைப் பார்த்துப் பேசுவதுபோல முயலவேண்டும்.

பி. ப. 1–31

திரு. நா. வெ. குருசாமி : ஆகவே மலைப்பகுதியும், ஏழை மக்கள் வாழும் பகுதியுமான வருஷநாட்டுப் பகுதியில் ரோடு வசதி நல்ல முறையில் செய்துகொடுக்கும்படியும் பல ஆண்டுகளாக கஷ்டப்பட்டு மலையை நிலமாக்கிப் பிழைக்கும் ஏழை மக்களுக்கு பட்டாக்கள் இன்னும் வழங்காமல் இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக பட்டாக்கள் வழங்கும்படி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கண்டமனூரில் குடி தண்ணிருக்கு மக்கள் படும் கஷ்டம் ரொம்பவும் பரிதாபமாக இருக்கிறது. ஒரு மைல் போய்த்தான் குடி தண்ணீர் எடுத்துவரவேண்டியுள்ளது. அவர்களுக்கு உடனடியாக குடி நீர் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கண்டமனூர் பக்கம் உள்ள ஆத்தங்கரைபட்டி அணை கட்டப்போவதாக அறிந்தேன். அந்த அணை கட்டினால் அந்த அணைக்கு கீழே உள்ள ஒன்பது கண்மாய்களுக்கும் நீர்பாய்ச்சல் செய்தால் கூடுமானவரை ஆண்டிப்பட்டி தொகுதியில் பாதி இடங்களுக்கு விவசாயத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும். அப்படிச் செய்தால் ஆண்டவனால் கைவிடப்பட்ட தொகுதி என்பது இல்லாமல் இருக்கும் என நம்புகிறேன். ஆத்தங்கரைப்பட்டி அணையை உடனடியாக கட்டி ஒன்பது கண்மாய்களுக்கும் நீர்ப்பாசனம் செய்துகொடுக்குமாறு கனம் நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றும் என் தொகுதியில் நெசவாளத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். தற்சமயம் விசைத்தறிகளும் வந்துவிட்டபடியால் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய குறைகளை தீர்க்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் கிராமங்களுக்கு பஸ் வசதி இல்லை. இந்த நிலையை மாற்றி போக்குவரத்துக்கு ஏற்ற முறையில் பஸ் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் வைகை அணைப் பக்கம் வேலை இல்லாமல் ரொம்ப பேர் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சிமிண்ட் பாக்டரி ஆரம்பித்தால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி நாயுடு அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார். பேரவை நாளை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

81. Notification issued with G.O. Ms. No. 1691, Rural Development and Local Administration, dated the 3rd September 1970, in regard to certain amendments relating to officers appointed to exercise the powers and duties of Inspector under the Tamil Nadu Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 198 (Tamil Nadu Act XXXV of 1958)].